**செ.வெ. எண்: 733** **நாள்: 08.12.2011**

# செய்தி வெளியீடு

இராமேசுவரம் பகுதியிலுள்ள கடலில் மீன்பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் அடிக்கடி தாக்கியும், கைது செய்தும் வருகின்றனர். இது பற்றி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின் கவனத்திற்கு அவ்வப்போதே கொண்டு சென்றுள்ளார்கள்.

கடந்த நவம்பர் 29 ஆம் தேதி, தங்கச்சி மடத்தைச் சேர்ந்த கிளாடுவின் என்பவருக்கு சொந்தமான படகை கடற்படையினர் மடக்கிப் பிடித்துள்ளனர். அப் படகில் மீன்பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்கள் எமர்சன், அகஸ்டஸ், லேங்க்லெட், பிரசாந்த், வில்சன் ஆகிய 5 மீனவர்களையும் கைது செய்துள்ளனர். பின்னர் இவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, மல்லாகம் நீதிமன்றத்தில் 5.12.2011 அன்று இவ் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இவ் வழக்கு 19.12.2011க்கு மேல் விசாரணக்காக தள்ளிவைக்கப்பட்டது.

இது தொடர்பாக, தமிழக அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 7.12.2011 அன்று தலைமைச் செயலகத்தில் விவாதித்தார்கள். இலங்கையில் வழக்கு தொடரப்பட்டுள்ள மீனவர்களை விடுவிக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும், அதற்கான வழக்கு செலவுகளை தமிழக அரசு ஏற்றுக் கொள்ளவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இதன் அடிப்படையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையின்படி, அப்பாவி மீனவர்களை விடுவிப்பதற்கான கூட்டமைப்பு (Alliance for release of Innocent Fishermen) மூலம், கைது செய்யப்பட்டுள்ள 5 மீனவர்கள் வழக்கினை நடத்தவும், அதற்கான வழக்கு செலவுகளை தமிழக அரசு ஏற்றுக் கொள்ளவும் உத்திரவிடப்பட்டுள்ளது.

*****

வெளியீடு : இயக்குநர், செய்தி. மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9
நாள் : 8.12.2011